Written by Administrator
Saturday, 15 August 2009 05:33 -

□□□□□□□□ **14.08.2009**

பூங்காவான மங்கள் ஏரி: சென்னை முகப்பேரில் உள்ள ஏரிகள், வீட்டு வசதி வாரியத்தின் கருணையால் அடுக்கு மாடி குடியிருப்புகளாக மாறிவிட்ட நிலையில், தப்பியது மங்கள் ஏரி மட்டுமே. அம்பத்தூர் நகராட்சியின் ஆசீர்வாதத்தால், பொது மக்களுக்கு பயன்படும் வகையில் பூங்காவாக மாற்றப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது.

பல வசதிகளுடன் தயாராகிறது மங்கள் ஏரி பூங்கா

சென்னை

ஆக்கிரமிப்பில் பிடியில் சிக்கிய முகப்பேர் பகுதியில் உள்ள மங்கள் ஏரி, தற்போது மங்கள் ஏரிப் பூங்கா வாக பல்வேறு வசதியுடன் தயாராகி வருகிறது.

அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், அதிகளவில் ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளன. இவை கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு, மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக பயன்பட்டு வந்தன. காலப்போக்கில் மக்கள், தாங்கள் இருக்கும் பகுதிக்கே குடிநீர் வந்துவிட்ட நிலையில், இந்த நீர்நிலைகளை மறந்து போய்விட்டனர். இதனால், பல ஏரிகள் மற்றும் குளங்கள், சிறுகச் சிறுக ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கியும், கழிவுநீர் தேக்கியும் காணாமல் போய்விட்டன.

அம்பத்தூர் பகுதியில் பல ஏரிகள் 'ஏரித் இட்டம்' என்ற பெயரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியத்தால் அடுக்கு மாடிக் குடியிருப்புகளாக மாறிவிட்டன. ஆனால், அம்மாதிரியாக எதிலும் சிக்காமல் தற்போது நவீன வசதிகள் நிறைந்த பூங்காவாக மாறியிருப்பது தான் மங்கள் ஏரி. பல ஆண்டுகளுக்கு முன்பு முகப்பேர் பொதுமக்கள் இருக்க போது பொழுது மக்களின் முக்கிய நீர் ஆதாரம் இந்த மங்கள் ஏரி தானாம்.

குடிசை வீடுகள் மாறி அதிநவீன குடியிருப்புகள், அடுக்கமாகள் வந்த பின்பு, இந்த மங்கள் ஏரி குப்பை கொட்டும் இடமாகவும், கழிவுநீர் சேகரிக்கும் இடமாகவும் மாறியது டன், ஆக்கிரமிப்பாளர்கள் பிடியி லும் சிக்கியது. இதுகுறித்து, அம்பத்தூர் நகராட்சிக்கு புகார்கள் அனுப்பப்பட்டன. இதையடுத்து, அம்பத்தூர் நகராட்சி அதிரடி நடவடிக்கை எடுத்து, ஏரியைப் படகுசவாரியுடன் கூடிய பூங்காவாக மாற்றும் முயற்சியில் இறங்கியது.

பத்து ஏக்கருக்கும் மேல் பரப்பளவு கொண்ட இந்த ஏரியில் தற்போது மிஞ்சியிருப்பது ஆறு ஏக்கருக்கள் உள்ள பரப்புதான். இதில், 5.32 ஏக்கர் பரப்பில் பூங்கா அமைக்கப்படுகிறது. தற்போது ஏரி நீர் முழுவதும் வற்றியுள்ள சூழலில், ஏரியின் அளவு குறைக்கப்பட்டு அதில் சுற்றிலும் 500 மீட்டர் நீளத்திற்கு நடைபாதை அமைக்கப்பட்டு, மின்விளக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் முடிக்கப்பட்டு பூங்கா விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குத் தயக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இது தவிர, இந்த ஏரியின் கரையில் உள்ள கோவிலில் இருந்தும் பூங்கா வீற்குள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னோர்களுக்கான சடங்குகள் செய்வதற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் விளையாடுவதற்கான இடங்களும் செய்யப்பட்டுள்ளன. முன்பு, இந்த ஏரிக்கு அருகில் உள்ள மாநிதான் நகரில் இருந்து கழிவுநீர் ஏரிக்குள் வந்து கொண்டிருந்தது. இதற்கான பாதை மாற்றப்பட்டு தனி யாக கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அம்பத்தூர் நகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தற்போது நடைபாதை மற்றும் விளக்குகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஏரியைச் சுற்றி லும் மண் கொட்டப்பட்டு பாதை சமன்படுத்தப்பட்டு, சுற்றிலும் சுற்றுச்சுவரும் எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு 60 லட்ச ரூபாய் நிதி செலவழிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசின் சார்பில் மேலும் 50 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு பூச்செடிகள் அமைத்தல் மற்றும் ஏரியைத் தூர்வாரி நீர் வழிகளை ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஏரியைச் சுற்றிலும் சேகரமாகும் மழைநீரை இப்பகுதிக்குள் கொண்டு வருவதற்கான பணிகள் செய்யப்படுகின்றன. இப்பணிகள் முடிந்து இன்னும் இரண்டு மாதத்தில் பூங்கா மக்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.